

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், ஜெயராமபுரம், வடுகபட்டி கிராமத்தில் முழு திருவுருவச் சிலையுடன் அமைக்கப்பட்டுள்ள சுதந்திர போராட்ட வீரர் பொல்லான் அரங்கத்தினை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டனர்.. நிகழ்வில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், இணை இயக்குனர் (நினைவகங்கள், சென்னை,) தமிழ்செல்வராஜன், கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சு.குணசேகரன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம், உதகை நகராட்சி மத்திய பேருந்து நிலையம் அருகில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.2.17 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் அம்பேத்கார் பூங்கா (அறிவியல் பூங்கா) அமைக்கும் பணியினை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் முன்னிலையில் நேற்று முன்தினம் (19.11.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் உதகை நகராட்சி ஆணையாளர் கணேசன், உதகை நகர்மன்ற தலைவர் திருமதி வாணீஸ்வரி, உதகை நகர்மன்ற துணை தலைவர் ரவிக்குமார், திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ் உட்பட பலர் உள்ளனர்.

### திரு. வி.க. நகர் மண்டலத்தில்

# ரூபாய் 39.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பூங்காவிற்கு அடிக்கல்!

## ரூ.35,08 கோடி மதிப்பில் வளர்ச்சித் திட்டப் பணிகள் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆய்வு மேற்கொண்டார்!

*சென்னை, நவ. 21 -*

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, திரு.வி.க. நகர் மண்டலத்தில் ரூபாய் 39.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பூங்காவிற்கு அடிக்கல் நாட்டி, ரூபாய் 35.08 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை நேற்று முன்தினம் (19.11.2025) பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட மேடவாக்கம் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிடும் வகையில் வார்டு75, மேடவாக்கம் 2 வது தெருவில், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த திறந்த வெளி நிலத்தினை மாநகராட்சி சார்பில் மீட்டெடுத்து அவ்விடத்தில் திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூபாய் 39.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பூங்கா அமைப்பதற்கான பணியினை அமைச்சர் அவர்கள் அடிக்கல்நாட்டி, தொடங்கி வைத்தார்.

பின்னர், வார்டு74, இந்து சமய அறநிலைத்துறை சார்பில் அருள்மிகு சேமாத்தம்மன் கோவிலில் நடைபெற்று வரும் கோயில் மண்டபம் கட்டுமானப் பணியினைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வார்டு 69, ஜி.கே.எம் காலனி ஜம்புலிங்கம் சாலையில், ரூபாய் 25.72 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடத்தின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த சமுதாயக் கூடம் 40,300 சதுரடி பரப்பளவில் தரைத்தளத்தில் கார், இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வகையில் வாகனங்கள் நிறுத்தும் வசதிகளுடனும், முதலாவது தளத்தில் ஒரே சமயத்தில் 435 நபர்கள் அமர்ந்து உணவு சாப்பிடும் வகையில் உணவுக்கூடம், இரண்டாவது தளத்தில் 800 இருக்கைகளுடன் திருமண மண்டபம் மூன்றாம் தளத்தில் 10 எண்ணிக்கையிலான தங்கும் அறைகள் வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

பின்னர், வார்டு68, கொளத்தூர் பேப்பர் மில்ஸ் சாலையில், ராஜா தோட்டம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு வளாகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூபாய் 1.10 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் இரண்டு பல்நோக்கு மைய கட்டடப் பணிகளைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து பணிகளை உரிய தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் மேற்கொள்ளவும் விரைவாக முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவரவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு71, பெரம்பூர் நெடுஞ்சாலை அருகே பொதுப்பணித் துறையின் சார்பில் ரூபாய் 8.26 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டட கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட பொதுப்பணித்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வுகளின் போது, மேயர் திருமதி ஆர். பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு. எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், இந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையர் திருமதி முல்லை, சென்னை மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி சு. கீதா, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி ரமணி லோகேஷ், திருமதி புனிதவதி எத்திராஜன் மற்றும் பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் விஜயன் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# மயிலாடுதுறை மாவட்டத்தில் எஸ்.ஐ.ஆர். பணிகள்!

## அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் பார்வையிட்டார்!

*மயிலாடுதுறை, நவ. 21 -*

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை, சீர்காழி குத்தாலம் ஆகிய ஒன்றியம் மற்றும் மயிலாடுதுறை, சீர்காழி ஆகிய நகரத்திலும் இந்திய தேர்தல் ஆணையத்தால் கொண்டு வந்துள்ள சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு பணிகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் நேரில் பார்வையிட்டார் .

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் நீடூர் பள்ளிவாசலில் முஸ்லிம் ஜமாத்தார்கள் மற்றும் கழகத்தின் சார்பில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு கணக்கீட்டு படிவத்தை பூர்த்தி செய்யும் பணியையும், சீர்காழி மேற்கு ஒன்றியம் சட்டநாதபுரத்திலும், சீர்காழி நகரம் இரணியன் நகர், மயிலாடுதுறை நகரம் நாஞ்சில் நாடு முத்தாலம்மன் கோயில் ஆகிய இடங்களில் நடைபெறும் எஸ் ஐ ஆர் பணியையும், அதைத் தொடர்ந்து குத்தாலம் கிழக்கு ஒன்றியம் மங்கநல்லூரிலும் குத்தால மேற்கு ஒன்றியம் கொழையூர் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு ( எஸ் ஐ ஆர் ) பணிகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ வீ.மெய்யநாதன் பார்வையிட்டார்.

நிகழ்ச்சிகளில் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம். எம்.சித்திக், ஒன்றிய கழக செயலாளர்கள் ஞான. இமையநாதன், ப. முருகமணி, அமிர்த.விஜயகுமார், எம்.அப்துல் மாலிக், என்.இளையபெருமாள், மங்கை எம்.சங்கர், ஏ.ஆர். ராஜா, பஞ்சு. குமார், பி.எம். அன்பழகன். செல்லசேது.ரவிக்குமார்,மயிலாடுதுறை நகர செயலாளர் குண்டாமணி (எ) என் செல்வராஜ்,

சீர்காழி நகரக் கழக செயலாளர் ம.சுப்பராயன். பொதுக்குழு உறுப்பினர்கள் நத்தம் ஏ.வின்சென்ட், பி கென்னடி பி.சிவதாஸ், சீர்காழி நகர் மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி ராஜசேகர், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் செல்வ முத்துக்குமாரன், சீர்காழி நகர மன்ற உறுப்பினர்கள் ராமு, ஏ.பி.எஸ். பாஸ்கர் மற்றும் ஒன்றிய, நகர . கிளை, வார்டுக் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், நகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற SIR குறித்த ஆலோசனை கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. , மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் கேசவன் ஆகியோர் விளக்க உரையாற்றினர். தொகுதி தேர்தல் பொறுப்பாளர் சௌமியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன், மாவட்ட துணை செயலாளர் எம்.ராமகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் ப.பிரகாஷ், பால. ஞானவேல்,பொதுக்குழு உறுப்பினர் ஜெயதேவன், ராகோ.உதயசூரியன், முன்னாள் ஒன்றிய செயலாளர் முகில். ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் உடன் பங்கேற்றனர்.

### எஸ்.ஐ.ஆர்.–ஐ அமல்படுத்துவதில் மோடி அரசுடன் சேர்ந்து

# தேர்தல் ஆணையம் காட்டும் தீவிரம் சந்தேகப்பட வைத்துள்ளது!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

*சென்னை, நவ. 21 -*

தினகரன் நாளேட்டின் நேற்று முன்தினம் தலையங்கம் வருமாறு:-

பீகாரை தொடர்ந்து தமிழ்நாட்டிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இறுதியாக தமிழ்நாட்டில் 2002ம் ஆண்டில் 197 தொகுதிகளிலும், 2005ம் ஆண்டு 37 தொகுதிகளிலும் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் நடந்தன. தற்போது 20 ஆண்டு கழித்து மேற்கொள்ளப்படும் இந்த பணிகளுக்கு தமிழ்நாடு முழுவதும் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.



தினகரன்

நவம்பர் 19, 2025 புதன்கிழமை

எஸ்ஐஆர் எதிர்ப்பு

தமிழ்நாட்டில் கடைசியாக 2025ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலின்படி சுமார் 6.36 கோடி வாக்காளர்கள் உள்ளனர். தமிழ்நாடு முழுவதும் 68,000க்கும் அதிகமான வாக்குச்சாவடிகள் உள்ளன. ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒரு வாக்குச்சாவடி அலுவலர் உள்ளார். அவர் தரப்பில் வீடுவீடாக சென்று எஸ்ஐஆர் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த படிவத்தை டிசம்பர் 4ம் தேதிக்குள் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

தற்போது எஸ்.ஐ.ஆர் பணிகளில் வாக்காளர்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றனர். ஒன்று 200205 எஸ்ஐஆருக்குப் பிந்தைய வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றவர்கள், இரண்டாவது அதில் இடம் பெறாதவர்கள். கணக்கீட்டுப் படிவத்தில் முதல் கட்டத்தை அனைவருமே நிரப்ப வேண்டும்.

2002-05 எஸ்.ஐ.ஆருக்கு பிந்தைய பட்டியலில் இடம்பெற்றவர்கள் முதல் கட்டத்தை நிரப்பியதோடு இரண்டாவது கட்டத்தில் 2002-05 எஸ்.ஐ.ஆருக்கு பிந்தைய வாக்காளர் பட்டியலில் உள்ள சட்டமன்ற தொகுதி, வாக்காளர் அடையாள அட்டை எண், பாகம் எண் மற்றும் வரிசை எண் உள்ளிட்ட விவரங்களை நிரப்ப வேண்டும்.

2005க்குப் பிறகு இடம் பெயர்ந்தவர்கள், முகவரி மாறியவர்களுக்கு பழைய தகவல்களை எடுப்பதில் சிக்கல் எழுகிறது. எனவே 2002-05 எஸ்ஐஆருக்குப் பிந்தைய வாக்காளர் பட்டியலில் உள்ள தகவல்களை இணையத்தில் தெரிந்து கொள்ளலாம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இதில் வாக்காளர் பெயர், வாக்காளர் அடையாள அட்டை எண் மூலம் விவரங்களைப் பெறலாம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. வாக்காளர் அடையாள அட்டை எண் இல்லை யென்றாலும் வாக்காளர் பெயர் மற்றும் வாக்காளர் பட்டியலை வைத்து தெரிந்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது. இவை எல்லாம் பெரிய வேலை. சாதாரண, பாமர மக்களுக்கு கடினம். அவர்களுக்கு உதவ, அரசு ஊழியர்கள் களம் இறக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு சட்டப் பேரவை தேர்தலுக்கு முன்னர் இத்தனை வேகமாக ஏன் செய்ய வேண்டும்? சட்டப்பேரவை தேர்தல் முடிந்த பிறகு செய்யலாம் அல்லது மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது மேற்கொள்ளலாம் என்ற குரல் தேர்தல் ஆணையத்தின் காதுகளுக்கு எட்டவில்லை. இதனால் அதிமுக, பாஜ தவிர ஆளும் திமுக உள்பட அனைத்து கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தி உள்ளன.

காங்கிரஸ் கட்சியும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு நிலுவையில் உள்ளது. ஆனால் அதிதீவிரமாக எஸ்ஐஆர் பணிகளை அமல்படுத்தும் வேலையில் தேர்தல் ஆணையம் தீவிரமாக உள்ளது. பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆதரவாக உள்ளனர். 2021ம் ஆண்டு கணக்கெடுக்க வேண்டிய மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் தொடங்கப்படவில்லை. அதற்கு மோடி அரசு அவசரம் காட்டவில்லை. 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் பணி அது. கொரோனாவை காரணம் காட்டி தள்ளி வைக்கப்பட்டது. 5 வருடங்கள் கடந்து விட்டன. எந்த பதிலும் இல்லை. ஆனால் எஸ்ஐஆர் அமல்படுத்துவதில் மோடி அரசுடன் சேர்ந்து தேர்தல் ஆணையம் காட்டும் தீவிரம் அனைவரையும் சந்தேகப்பட வைத்துள்ளது.


இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் கொத்தமங்கலம் ஊராட்சி பாக எண் 102, 103ல் பகுதியில் பாகநிலை முகவர்கள்(BLA2) மற்றும் பாகநிலை டிஜிட்டல் முகவர்களுக்கான (BDA) பாகம் வாரியாக நிர்வாகிகளுடன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆலோசனை மேற்கொண்டு கழகத் தலைவர் அறிவுறுத்தல்படி, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப் பட்டியல்(SIR) பணிகளில் கழக நிர்வாகிகள் மேற்கொண்டு வரும் பணிகள் குறித்து ஆய்வு செய்தார். உடன் திருவரங்குளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ்.ரவி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கத்திவாக்கம் மிசா இ.வீரராகவன்
### நவம்பர் 21 (2010)



கத்திவாக்கம் பகுதியில் 1959ஆம் ஆண்டு கழகக் கிளையைத் துவக்கி, முதல் கிளைச் செயலாளர் என்ற பெருமையும் பின்னர் நகரக் கழகச் செயலாளராக 35 ஆண்டு காலம் தொடர்ந்து கழகப் பணியாற்றியவர். தொடர்ந்து பொதுக்குழு உறுப்பினராகவும், கத்திவாக்கம் நகராட்சியின் முதல் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசமும் மற்றும் கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு 27 முறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.